1984 மார்ச் 14]

மாண்புமிகு டாக்டர் எச். வி. ஹண்டே: மாண்புமிகு தலைவர் அவர்களே, இதே கேள்வியைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மியாகான் கேட்டார். பயிற்சி தரப்படும். பிறகு அவர்கள் வேலையில் அமர்த்தப்படுவர். கன்சாலிடேடட்டாக மாதம் ஒன்றுக்கு ரூ. 240 கொடுக்கப்படும். இவ்வாறு முதன்முதலாக நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசுதான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுத்து வருகிறது. இதுவரை அவர்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்படவில்லை. நம்முடைய புரட்சித் தலைவர் அவர்கள், இதைப் பார்த்துச் சில இடங்கள் காலியாக இருக்கின்றன. அதிலே 'ஏ' கிளாஸ் டாக்டர்கள் வரவில்லை. ஆகவே காலியாக இருக்க வேண்டியதில்லை. மரபு வழி பயிற்சி மருத்துவர்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று சொன்னார்கள். திட்டவட்டமாக அவர்கள் உத்தரவு போட்டுத்தான் இந்தக் காரியத்தை நாம் நிறைவேற்றி வருகிறோம். இது குறித்து மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழ்ச்சி அடைவார்கள் என்று நம்புகிறேன்.

கால்நடை மருத்துவமனை, பின்னலூர்.

*95. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. சி. ரா. லெட்சுமி காந்தன் சார்பில்): மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சிதம்பரம் வட்டம், பின்னலூர் கிராமத்திலிருக்கும் கால்நடை மருத்துவமனைக் கட்டிடம் பழுதடைந்துள்ளதால், அதனை உடனடியாகப் பழுது பார்ப்பதோடு, போதுமான கட்டிட வசதியும் செய்து தர வேண்டும் என்று 26—5—1982-ல் அந்த ஊர் கிராம மக்களிடமிருந்து அரசுக்கு முறையீடு ஏதும் வந்துள்ளதா?

(இ) ஆம் எனில், அதன்மீது எடுத்த நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திருமதி கோமதி சீனிவாசன்: (அ) சிதம்பரம் வட்டம், பின்னலூர் கிராம மக்களிடமிருந்து 26—5—1982 நாளிட்ட கடிதம் ஏதும் பெறப்படவில்லை. ஆனால் 23—2—1982-ல் அரசுக்கு ஒரு கோரிக்கை வந்தது. அதில் அக்கிராமத்திலுள்ள கால்நடை மருத்துவமனையை பழுது பார்த்து மீண்டும் செயல்பட வைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்பட்டு வரும் நேரத்தில், கால்நடை மருத்துவமனை கட்டிடம் பழுது பார்க்கும் வரையில், பின்னலூர் தாய்சேய் நல விடுதி (அல்லது) துணை சுகாதார நிலையம் இரண்டில் ஏதாவது ஒன்றில் இயங்கிச் செயல்புரிய ஆவன செய்யுமாறு கோரப்பட்டது.

(இ) மேற்படி முறையீடு கால்நடை பராமரிப்பு இயக்குநருக்கு அனுப்பப்பட்டது. 1940-ம் வருடம் இக்கட்டிடம் கட்டப்பட்டதாலும், மேலும் பழுதடைந்துள்ள நிலையிலுள்ளதாலும் மேற்கொண்டு மருத்துவமனை செயல்படச் சாத்தியக்கூறு இல்லை என சிதம்பரம் உதவி செயற் பொறியாளர் சான்று கூறியுள்ளார். ஆகவே, பின்னலூர் கால்நடை மருந்தகம் 1—5—82 முதல் திரு. மருதவாணன் பிள்ளை அவர்களால், வாடகையின்றி வழங்கப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் செயல்பட்டு வருகிறது. பின்னலூரில் கால்நடை மருந்தகம் புதிதாகக் கட்டுவதற்கு செலவின் மதிப்பீட்டை அனுப்புமாறு சிதம்பரம் பொதுப் பணித்துறை செயற்பொறியாளர் கோரப்பட்டுள்ளார். அது பெறப்பட்டவுடன் தக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : 9—3—1984 அன்றைய வினாப் பட்டியலிலிருந்து ஒத்திப் போடப்பட்ட வினா.

Tri Planting Rod Device.

* 80. *Q.*—Thiru P. R. THOMAS: Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that a Tri Planting Rod device has been introduced in paddy cultivation in Tamil Nadu; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து : (அ) ஆம். 'ட்ரை பிளேண்டிங் ராடு' எனப்படும் நடவு கோல் கோவை வேளாண்மைப் பல்கலைக் கழகத்தில் கண்டு பிடிக்கப்பட்டு, குடுமியான்மலையில் நடைபெற்ற வேளாண்மைத் துறை அலுவலர்களின் கூட்டத்தில் செயல்விளக்கமாகச் செய்து காட்டப்பட்டது. இக்கருவி இன்னும் செயல்விளக்க நிலையிலே உள்ளது.

(இ) தற்பொழுது இக்கருவி தஞ்சை மாவட்டத்தில் தயாரிக்கப்பட்டு, அங்குள்ள விரிவாக்க அலுவலர்களுக்கு செயல்முறையில் விளக்கப்பட்டுள்ளது. உழவர்களிடம், நல்ல வரவேற்பு இக்கருவிக்கு இருப்பின் இக்கருவியை உள்ளூரில் உள்ள உலைகளில் தயாரித்து விநியோகிக்கப்படும்.

மாண்புமிகு மேலவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் இடப்பட்டிருக்கும் உடுக்குறி (*) அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]